மனஸ்தாபப்படுகிறேன். இதோ உமது பாதத்
தில் விழுகிறேன்; பாவ மன்னிப்புக்கேற்ற
மெய்யான மனஸ்தாபத்தை எனக்குத் தாரும்; நீர்
அங்கிகரிக்கத்தக்க நொறுங்குண்ட இருதயத்தை
எனக்குப் பாவமன்னிப்பின் ஆசீர்வாதங்களை
அருளியருளும். என் நேச இரட்சகா! சிலுவையில்
காயப்பட்டு எனக்காக இரத்தம் சிந்தினீரே.
இதற்கு காரணம் என் பாவம் தான். உம்முடைய
வேதனைகள் துக்கங்கள் எல்லவற்றையும்
நான் சரியானபடி உணர்ந்து என் பாவங்களைப்
பகைக்கிறேன். என்னை மன்னித்து, பரிசு
த்தப்படுத்தும். இனிப்பாவம் செய்யாதபடிக்கு
எனக்கு உதவி செய்தருளும். இயேசுவின்
நாமத்தில் வேண்டுகிறேன் பரம தகப்பனே.
ஆமேன்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

**மேலும் விபரங்கட்கு :**


WOGTAM006

# மனிதர் உணரா கொடிய வியாதிகள்

இந்த கேள்விகளை
உங்களுக்குள்ளே கேட்டு
பாருங்கள். ஒரு வேளை இதில்
ஏதாவது ஒரு கேள்விக்காவது
ஆமாம் என்ற பதில் வருமானால்,
அன்பரே நீர் மிகவும் ஆபத்தான
வியாதியில் இருக்கிறீர்.

உள்ளவர்களை மிதமிஞ்சிக் கண்டிப்பாகப் பேசி
நடத்தினதுண்டா? அற்பக் காரியத்தையிட்டுப்
பதஷ்டமும், பெருஞ்சத்தமும்போட்டதுண்டா?
துன்பம், துக்கம், தரித்திம் நேரிட்டபோது எரிச்சலும்
கோபமும் காட்டினேனா?
அப்படியானால் நீங்கள் கோபம் என்னும் மிகவும்
கொடிய பாவ வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.

6.

என் வேலையை அசதியாய்ச் செய்தேனா?
அரைகுறையாக செய்தேனா? சோம்பலாய்
வேலையை முடிக்க நாள் கடத்தினேனா?
பிந்தி எழுந்து ஜெபம் பண்ண நேரமில்லாதபடி
வேலைக்குப் போனேனா? என்னால்
கூடியபொழுதெல்லாம் பரி. இராப்போஜனத்தில்
சேர்ந்தேனா? தகுந்த ஆயத்தத்தோடு இராபோஜனம்
வாங்கினேனா? என் பாவங்களை அடிக்கடி பரிசே
ாதனை பண்ணிவருகிறேனா?
சோம்பலால் தனி ஜெபத்தை விட்டேனா? தியானம்
பண்ணாமலிருந்தேனா? மற்றவர்களுக்காக
ஜெபத்தை நிறுத்தினேனா? அற்ப்ப பாவங்களுக்கு
இடம்கொடுத்தேனா? சோம்பலால் வேலை
செய்வதை நிறுத்தி, பாவம் செய்தேனா? நான்
கஷ்டப்படாமல் மற்றவர்கள் கஷ்டப்பட்டுச்
சம்பாதித்ததில் பிழைக்க ஆசைப் படுகிறேனா?
என்னுடைய சோம்பலால் என்னால் ஆதரவு பெற்றுப்



கொடிய பாவ வியாதி உள்ளது.

2.

தேவன் எனக்குக் கொடாத வாழ்வு வேண்டுமென்று
விரும்பினேனா? கள்ளத்தனமாக ஏதாவது
பொருளைச் சம்பாதித்தேனா? மற்றவனுடைய
எந்தப் பொருளையும் எனக்குவேண்டுமென்று
ஆசைப்பட்டேனா? பிறர் சொத்தை அபகரிக்க
முயற்சித்ததுண்டா? பணத்தின்மேல் பணம்
சேர்க்க விரும்பினேனா? பணமே என்
தெய்வம்போலிருக்கிறதா? பண ஆவலால் மற்றவன்
சாவை நாடினேனா? சூதாடிப் பணம் சம்பாதி
த்ததுண்டா? தர்மம் கொடாமலும் காணிக்கை
செலுத்தாமலும் பணத்தை நான் கூட்டினேனா?
கூலிக்காரருடைய கூலியைக் குறைத்து, என்
ஆஸ்தியைப் பெருக்கினேனா? கள்ளப் படியாலும்,
கள்ள நிறைகல்லாலும் எனக்குப் பணம்
சேர்ந்ததோ? விதவிதமான துணிமணிகளில்
ஆசைக்கொண்டேனா? புது புது மோட்டார், கார்
வாகனங்கள் மீது ஆசைப்பட்டேனா?
அப்படியானால் உங்களை பொருளாசை என்னும்
கொடிய பாவ வியாதி தொற்றுக்கொண்டுள்ளது.

3.

என் சரீரமானது பரிசுத்த ஆவி தங்குகிற
ஆலயமாயிருக்கிறதென்று நினைத்தேனா? மாம்ச
இச்சையை யோசித்தேனா? இச்சை விருத்தியாகப்

1.

என்னைப்பற்றி உயர்வாக நினைத்துக்கொள்ளுகிறேனா? நான்தான் என்கிற ஆணவமுண்டா? என் வேலையையும், என் பேச்சையும் புகழ்ந்துகொள்ளுகிறேனா? என் உடை, நடை, அழகு, பேச்சு இவைகளைப்பற்றி கர்வம்கொள்ளுகிறேனா? எனக்கில்லாத வரம் உண்டென்று காட்டுகிறேனா? என் கருத்தை உயர்ந்ததென்று சொல்லுகிறேனா? என் கருத்து தவறு என்று மனதில் அறிந்தும் அது சரியென்று சாதிக்கிறேனா? ஏதாவது விஷயத்தில் என் பேர் புகழ்ச்சியாய் வராவிட்டால் எரிச்சலடைகிறேனா? பேர் பிரஸ்தாபத்துக்கு நாடி உபாயதந்திரம் செய்கிறேனா? என்னாலாகாத காரியத்தை, நானாச்சுது என்று சாமர்த்தியம் பேசின துண்டா? என்னிஷ்டப்படிச் செய்ய நாடினேனா? மற்றவர்கள் புகழப்பட்டபோது எனக்கு விசனம் வந்ததா? மற்றவர்களை பழிப்பாய்ப் பேசினதுண்டா? மற்றவர்களுக்கு இணங்காத குணமுண்டா? தாழ்த்தப்படும்போது சகித்துக்கொண்டேனா? என் குற்றத்தைத் துணிந்து மறுத்தேனா? நான் அதிகாரத்துக்கு ஆசைப்படுபவனா? எனக்கு அநேக நல்லகுணமுண்டு என்று பெருமையாக நிலைத்துக்கொண்டேனா?

அப்படியானால் உங்களுக்கு பெருமை என்னும்



பிழைக்க வேண்டியவர்கள் பசியாயிருக்கிறார்களா? அப்படியானால் நீங்கள் சோம்பல் என்னும் பாவ வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.

இந்த கேள்விகளால் அல்லது இதுபோலொத்த தற்சோதனையால் உன் இருதயத்திலுள்ள பாவங்களைப் பரி சோதித்து, உன் பாவங்களை ஒரு குறிப்பில் எழுதி அல்லது ஞாபகத்தால் அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவிடம் இரக்கம் பெறவேண்டியது மிகவும் அவசியம்.

இச்சமயத்தில், பரிசுத்தமும் மகத்துவமுமுள்ள தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தேனே! அன்பும் இரக்கமுமுள்ள தேவனை என் பாவ த்தால் வருத்தப்படுத்திவிட்டேனே! எனக்காகத் தமது குமாரனான இயேசுவை சிலுவையில் பாவப் பரிகாரியாக தந்தாரே, என்னை தமது பிள்ளையாக்கினாரே, எனக்கு மோட்சத்தையும் தரப் பிரியமாயிருக்கிறாரே, இப்படிப்பட்ட நேசமுள்ள பிதாவை கனவீனப்படுத்திவிட்டேனே என்று உணர்ந்துகொண்டு, கீழேகாணும் ஜெபத்தை செய்யுங்கள்.

ஜெபம்

அளவில்லாத தயவு நிறைந்த இயேசுவே, சர்வலோக பாவப் பரிகாரியே! உமக்கு விரோதமாகப் பாவம் செய்தேன் என்று உணர்ந்து



பிரயத்தனங்கள் செய்தேனா? மாம்ச இச்சை க்கு உதவியாக என் கண்ணை, அல்லது கையை அல்லது பேச்சைப் பிரயோகித்தேனா? கெட்ட எண்ணமுண்டாகத்தக்க புஸ்தகங்கலை வாசி த்தேனா? பாட்டுகள் படித்தேனா? படங்களை அல்லது பொம்மைகளை பார்த்தேனா, செய்தேனா? மற்றவர்களைச் சிற்றின்பத்துக்கு எழுப்பிவிட்டேனா? நான் அடக்கமும், மரியாதையுமாய் நடந்து கொண்டேனா? மாம்ச சிந்தைக்கேதுவாக மற்றவர்களுடன் மிதமிஞ்சம் செய்கிறேனா?

அப்படியானால் நீங்கள் இச்சை என்னும் கொடிய பாவ வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.

4.

மற்றவர்களோ என்னைவிட அழகில் அல்லது ஐசுவரியத்தில் அல்லது ஆவிக்குரிய வரங்களில் அதிகப்பட்டிருக்கிறதினிமித்தம் பொறாமையடைந்தேனா? மற்றவர்கள் என்னைவிட சமர்த்தரும், பலவான்களும், சுகதேகிகளுமாயிருக்கிறதை கண்டு எரிச்சலடைந்தேனா? மற்றவர்களைப் பற்றிப் புறங்கூறி, பழித்து, குறைகூறுகிறேனா? என் வார்த்தையாலாவது, செய்கையாலாவது, நினைவாலாவது மற்றவர்களை நஷ்டப்படுத்தினேனா? மற்றவன்



உத்தியோகம் அல்லது சம்பளம் உயர்ந்தபோது மனவருத்தப்பட்டேனா? மற்றவர்களைப் புகழ்ந்து பேசுவது என் காதுக்கு வருத்தமாயிருந்ததா? பிறர் நஷ்டப்பட்டபோது மகிழ்ச்சியடைந்தேனா? மற்றவர்களுடைய குற்றங்களைப் பற்றி பெரும் பேச்சும், விசாரணையும் நடக்க ட்டும் என்று நினைக்கிறேனா? பிறர் பேசி ன வார்த்தைகளை தப்பாக அர்த்தம் பண்ணி அதை வெளியிடுகிறேனா? பொறாமையினாலே மற்றவர்களைப் பற்றிய நன்மையான சங்கதிகளை மறைத்து வைத்துகொள்ளுகிறேனா? பொறாமையினாலே மற்றவனை நஷ்டப்படுத்தி லாபம் பெற்றுகொண்டேனா?

அப்படியானால் நீங்கள் பொறாமை என்னும் கொடிய பாவ வியாதியால் தாக்கப்பட்டு மரணத்திற்கு ஆயத்தமாக்கப்பட்டுள்ளீர்கள்.

5.

நான் முற்கோபியா? கோபத்தால் யாரையாவது அடித்தேனா? ஏதாவது பொருட்களை உடைத்தேனா? ஏசிப்பேசினேனா? முகாந்தரமின்றி கோபமடைந்தேனா? காரணமின்றி ஒருவனை அருவருத்தேனா? சண்டை பிடித்தேனா? கோபத்தால் மற்றவனோடு பேசாமலிருந்தேனா? மற்றவனோடு எரிச்சலாகி நற்கருணையில் சேராமலிருந்தேனா? என் கையின்கீழ்